பாடம் 21

இயேசுவின் சிறிய மலர் பேசுகிறாள்

நான் 1873 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 02 ஆம் திகதி பிரான்சில் அலெக்சோன் என்னும் நகரில் பிறந்தேன். அப்போது என்னுடைய பெயர் மாறி பிரன்சுவா திரேஸ் மாட்டின். என்னுடைய அப்பா லுவிஸ் மாட்டின். அம்மா செலீன் கெரன். ஒன்பது பிள்ளைகளைக் கொண்ட எங்கள் குடும்பத்தில் கடைசிப் பிள்ளை தான் நான்.

எனக்குத் தெரிந்த வயதிலிருந்து நான் இயேசுவை அன்பு செய்தேன். இயேசுவை மகிழ்ச்சிப்படுத்தக் கூடிய எல்லா வேலைகளையும் செய்தேன். எனக்குப் 11 வயது நடக்கும் போது என் அம்மா இயேசுவிடம் சென்றுவிட்டாள்.

எனக்குப் 14 வயது நடக்கும் போது ஒரு நாள் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த என் தந்தையிடம் போனேன். கார்மேல் கன்னியர் மடத்தில் சேருவதற்கு அவரிடம் அனுமதி கேட்டேன். நான் இவ்வாறு கேட்பேன் என்று ஒரு போதும் அவர் எண்ணியது இல்லை என்பது அவருடைய முகத்தில் தெரிந்தது.

அவர் தோட்டத்திலிருந்து ஒரு வெள்ளைப் பூவைப் பறித்து என் கையில் தந்தார்.

"இறைவன் உன்னுடை சிறிய ஆன்மாவை இந்த வெள்ளை மலரைப் போல் விசேடமாகப் பாதுகாத்துத் தூய்மைப்படுத்தியுள்ளார்" என்று கூறினார்.

பின்னர் நான் என் தந்தையுடன் பங்குத் தந்தையைச் சந்திக்கச் சென்றேன். என்னுடைய விருப்பத்தை அவரிடம் கூறினேன். அதற்கு நான் இன்னும் சிறியவளாக இருக்கிறேன் என்று அவர் கூறினார். ஆகவே, நாங்கள் பரிசுத்த பாப்பரசரைச் சந்திக்கச் சென்றோம். நான் அவரிடம் தவவாழ்வு வாழ்வதற்கு விசேட அனுமதி கேட்டேன். அவரும் அதை எனக்கு வழங்கினார்.

நான் மிகவும் மகிழ்ச்சியுடன் மடத்தில் சேர்ந்தேன். அப்போது என்னுடைய வயது 15. எல்லோரும் நான் சிறியவள் என்று சொல்லி நான் செய்யும், சொல்லும் எல்லாவற்றிலும் பிழை கண்டார்கள். நான் கூட்டினால் "சரியாகக் கூட்டத் தெரியாது" என்பார்கள். தோட்டத்தில் வேலை செய்தால் ஒன்றும் செய்யத் தெரியாது என்பார்கள். இவைகள் பெரிய காரியங்கள் அல்ல. இவை யாருக்கும் தெரியாது, யாரும் காணாத சின்ன உள்ளத்துள் இருக்கும் சிறியவைகள். நான் அவற்றை எல்லாம் இயேசுவிடம் ஒப்படைத்தேன்.

எனக்கு 24 வயது நடக்கும் போது நான் நோய்வாய்ப்பட்டேன். என்னுடைய எல்லா வேதனைகளையும் இயேசுவுக்காக நான் சகித்துக் கொண்டேன். நான் சுகவீனமாக இருக்கும் போது தான் என்னுடைய வாழ்க்கை வரலாற்றை எழுதினேன்.

நான் இப்போதும் இயேசுவைப் பின்பற்றி வாழ விரும்பும் அனைவருக்கும் உதவி செய்கிறேன். சிறியவர்களாகிய நீங்களும் இயேசுவை அன்பு செய்து அவரை மகிழ்ச்சிப்படுத்துங்கள். நீங்கள் செய்யும் எல்லா வேலைகளும் இயேசு உங்களுக்குத் தரும் சிறிய பூக்கள் என எண்ணுங்கள்.

ஒப்படை :

1. இயேசுவின் சிறிய மலரின் திருநாள் எப்போது கொண்டாடப் படுகிறது.
2. அவர் பெயரால் அர்ப்பணிக்கப்பட்டுள்ள ஆலயங்கள் உள்ள இடங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.
3. அவரின் வாழ்க்கையிலிருந்து நீங்கள் கற்றுக் கொள்ளும் முன்று பாடங்களை எழுதுங்கள்.